# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

**C.C. No. 163/2020**

**வழக்கு சாட்சி – அ.சா. 5**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. எழிலரசு. | ஜாதி | |
| தந்தை பெயர் | ராஜன். | தொழில் | ஓட்டுநர். |
| கிராமம் | போடி–துரைராஜபுரம். | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 32/2025. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.05.2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, போடி–துரைராஜபுரத்தில் குடியிருந்துகொண்டு, ஓட்டுநராக தொழில் செய்து வருகிறேன். கடந்த 10.03.2020–ம் தேதியன்று, ரவிராகுல் என்னிடம் துணி எடுப்பதற்காக திண்டுக்கல் செல்ல வேண்டும் என்று கூறி, என்னுடைய TN 57 AL 4568 என்ற எண் கொண்ட போர் பியஸ்டா வாகனத்தை வாங்கிச் சென்றார். இரவு 08.00 மணியளவில் ரவிராகுல் எனக்குப் போன் செய்து, அல்லிநகரம், பொம்மைய கவுண்டன்பட்டி அருகே விபத்து ஏற்பட்டதாகவும், அதில் ஒரு முதியர் இறந்துவிட்டார் என்றும், மறுநாள் காலையில் என்னுடைய வாகனத்தின் ஆவணங்களை அனைத்தையும் எடுத்துக்கொண்டு, அல்லிநகரம் காவல் நிலையத்திற்குச் சென்றேன். காவல் நிலையத்தில் என்னுடைய ஆவணத்தை சரிபார்த்தார்கள். அது சம்பந்தமாக, போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

எனது காரின் வலது புறக் கண்ணாடியின் மேல்புறத்தில் சேதமடைந்து இருந்தது. அதைத் தவிர, வேறு எங்கும் சேதம் ஏற்படவில்லை.